C.P.No. 5 /2019
Date.17.07.2179
Witness: WW 1 Thiru.A.Abdul Mazeeth

சாட்சிக்கு பிரமாணம் செய்விக்கப்பட்டு சாட்சியிடம் 2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை -

நான் யாரால் பணி நீக்கம் செய்யப்பட்டேன் என்றால் 1 ம் எதிர்மனுதாரரான NEPC Tea Garden நிறுவனத்தால் பணி நீக்கம் செய்யப்பட்டேன். 2009 முதல் 2011 வரை நான் 2 ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் பணிபுரிந்தபோது எனக்கு சம்பள நிலுவைத்தொகை பாக்கி உள்ளதா என்றால் இல்லை. நான் 2 ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் பணிசெய்து கடைசியாக பெற்ற சம்பளம் எவ்வவு என்றால் ரூ.13132/- ஆகும். 1 ம் எதிர்மனுதாரர் என்னை பணிநீக்கம் செய்தபிறகு நான் மீண்டும் வேலை வழங்கவேண்டும் என்று கேட்டு 2 ம் எதிர்மனுதாரர் நிர்வாகத்திற்கு கடிதம் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். தொழில்தாவாவில் இரண்டாம் எதிர்மனுதாரர் எதிர்உரையில் என்னை ( நான்) தொழிலாளி இல்லை என்ற ஆட்சேபனையை கூறியிருந்தார் என்றால் ஆமாம். அலுவலக பணியாளர்களுக்கான நிலையாணைதான் எனக்கு பொருந்தும் என்று கூறி ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். 2 ம் எதிர்மனுதாரர் என்னை வேலை நீக்கம் செய்யவில்லை என்றும் எனக்கு வேலை மறுக்கவில்லை என்றும் அதனால் 2 ம் எதிர்மனுதாரர் மீது நான் இந்த மனுவை தாக்கல் செய்ய முடியாது என்றும் சொன்னால் தவறு, 2 ம் எதிர்மனுதாரர்தான் வாய்மொழியாக என்னை வேலைக்கு வரவேண்டாம் என்று கூறினார். நான் தொழில்தாவா தாக்கல் செய்தபிறகு காலம் தாழ்த்தித்தான் 2 ம் எதிர்மனுதாரரை தரப்பினராக சேர்த்தேன் என்றால் ஆமாம். தொழிலாளர் துறையில் நான் தாக்கல் செய்திருந்த மனுவிலும் 2 ம் எதிர்மனுதாரரை தரப்பினராக

சேர்க்கவில்லை என்றால் சரிதான். உண்மையில் 2ம் எதிர்மனுதாரர் எனக்கு வேலை மறுத்திருந்தால் அவரை ஆரம்பத்திலேயே எதிர்மனுதாரராக சேர்த்து மனு தாக்கல் செய்திருப்பேன் என்றும் அவர் எனக்கு வேலை மறுக்கவில்லை என்பதால்தான் அவரை ஆரம்பத்தில் நான் தரப்பினராக சேர்க்கவில்லை என்றும் தற்போது இந்த வழக்கிற்காக நான் 2ம் எதிர்மனுதாரர் எனக்கு வேலை மறுத்ததாக பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் 2ம் எதிர்மனுதாரரை தரப்பினராக சேர்க்கவேண்டும் என்று தாக்கல் செய்த மனுவில் 2ம் எதிர்மனுதாரர் குத்தகைக்கு எடுத்து நடத்தி வருவதால் அவரை தரப்பினராக சேர்க்கவேண்டும் என்றுதான் கூறியுள்ளேன் என்றால் 2ம் எதிர்மனுதார் குத்தகைக்கு எடுத்தபிறகு நான் அவரிடம் வேலை செய்து சம்பளம் பெற்றுவந்த 1 1/2 வருடங்களுக்கு பிறகுதான் என்னை பணிநீக்கம் செய்தார்கள் அதனால் 2ம் எதிர்மனுதாரரை தரப்பினராக சேர்த்தேன். 2ம் எதிர்மனுதாரருக்கும் என் பணி இழப்பிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும் அதனால் 2ம் எதிர்மனுதாரரிடம் நான் இந்த மனுவில் எந்த பரிகாரமும் கேட்க முடியாது என்றும் சொன்னால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரர் குத்தகைக்கு எடுத்த பிறகு எனக்கும் 1ம் எதிர்மனுதாரருக்கும் இடையில் வேலை சம்பந்தமாக எந்த பேச்சுவார்த்தையும் இல்லை. 2ம் எதிர்மனுதாரர் குறித்து எந்த பரிகாரமும் கேட்க முடியாது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.